சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 07.02.2026
பி.வா.சா.2 –S.சலீம் S/o ஷேக்தாவூத்
O.S. No.359/2021
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்)

சாட்சியிடம் பி.சா.ஆ.5 ஆவணம் காட்டப்பட்டு, இதற்கு முன்பாக விசாரிக்கும்போது காண்பித்தார்களா என்று கேட்கப்பட்டது, ஆவணத்தை காண்பித்தார்கள் என்று சாட்சி குறிப்பிடுகிறார். பி.சா.ஆ.5 ஆவணம் குடும்ப ஏற்பாட்டு ஆவணம் என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் பாகபிரிவினை செய்து கொண்டதின் ஞாபக குறிப்பு என்று எழுதப்பட்டுள்ளது. பி.சா.ஆ.5 ஆவணம் குடும்ப ஏற்பாட்டு ஆவணம் அல்ல என்றால் ஞாபககுறிப்பு ஆவணம் என்று எழுதப்பட்டுள்ளது. பி.சா.ஆ.5 ஆவணம் எழுதப்படும் போது எனக்கு நேரடியாக தெரியாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே முதல் விசாரணையில் காதர்மைதீன் தனது தந்தை வழி கிடைத்த சொத்தின் ஒரு பகுதியை மூத்த மகனான கமாலுக்கும், நூர்ஜஹானுக்கும் கொடுத்தார் என்றும் எவ்வளவு கொடுத்தார் எனறு நினைவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்து பிரித்து கொடுக்கும் போது, நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அப்போது இல்லை, நான் சாட்சியாக மட்டுமே இருந்தேன். பி.சா.ஆ.5 ஆவணத்தில் காதர்மைதீனின் 2வது மனைவியான மரியம்பீவி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தின் விபரங்கள் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றும், நான் அதை சரியாக தெரிந்து கொள்ளாமல் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல, ஓரளவிற்கு சொத்து பிரித்தது பற்றி எனக்கு தெரியும். காதர்மைதீன் அவர் பூர்விகத்தில் அவருக்க கிடைக்கப்பட்ட

சொத்துக்களை அவர் தன் கைவசம் வைத்துகொண்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் சரியல்ல. தந்தைவழி சொத்தில் ஒருபகுதியை மூத்த மகனான கமாலுக்கும், மகளான நூர்ஜஹானுக்கும் ஒருபகுதியை கொடுத்தார். அவ்வாறு கொடுத்ததற்கு ஆவணம் பதிவு செய்து கொடுத்திருக்கிறாரா என்றால் இல்லை. ராஜாமுகமதுவிற்கு சொத்து உரிமை மாற்றம் செய்யப்பட்ட விபரம் பற்றி எனக்கு எதுவும் தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.02.07 20:14:29 +0530

Sub Judge

Melur